செ. கு. எண்: 186 நாள் : 25.09.2014

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 25.9.2014

நீலகிரி மாவட்டத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் தொழிலாகவும், நீலகிரி மாவட்ட மக்களின் வாழ்க்கையை வளமாக்கும் தொழிலாகவும், அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் தொழிலாகவும் விளங்குகின்ற தேயிலைத் தொழிலை ஊக்கப்படுத்தும் வகையிலும், இத்தொழிலை நம்பியுள்ள தேயிலைத் தொழிலாளர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாத்திடும் வகையிலும் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

என்னால் 2001 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்ட "ஊட்டி டீ" விற்பனைத் திட்டம் தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தேயிலைத் தூள் விற்பனையில் இடைத்தரகர்களை அகற்றிடும் வகையில், கணினிமயமாக்கப்பட்ட தேயிலை ஏல மையம் என்னால் 2003 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டு, பிற ஏல மையங்களுக்கு வழிகாட்டியாக இன்றளவும் திகழ்ந்து வருகிறது. 2005 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைத்திடும் வகையில், அவர்களுக்கு சிறு தேயிலை விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம் மூலம் 28 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.

நான் 2011–ல் மூன்றாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், சிறு தேயிலை விவசாயிகள் வழங்கும் பச்சைத் தேயிலைக்கு ஆதரவு விலை அளித்திடும் வகையில், 2011–2012 ஆம் ஆண்டில் 11 கோடியே 20 லட்சம் ரூபாயையும், 2012–2013 ஆம் ஆண்டில் 6 கோடி ரூபாயையும் மானியமாக வழங்கினேன். நீலகிரி மாவட்டத்தில் உள்ள 15 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்காக 5 கோடியே 46 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. பசுந்தேயிலையினை துல்லியமாக எடையிட்டு கொள்முதல் செய்திட ஏதுவாக 100 மின்னணு தராசுகள் வழங்கிட 50 லட்சம் ரூபாய் மானியம் எனது தலைமையிலான அரசால் வழங்கப்பட்டது. மேலும், 100 மின்னணு தராசுகள் வாங்கவும், புதிய மின் சேமிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் 1 கோடி ரூபாய் நிதியினை நான் வழங்கியுள்ளேன். கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும், 22,000 சிறு தேயிலை விவசாய உறுப்பினர்கள் பயனடையும் வகையில் 24 கோடியே 16 லட்சம் ரூபாய் மானியம் எனது தலைமையிலான அரசால் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது சர்வதேச அளவில் நிலவி வரும் தேயிலை விலை வீழ்ச்சியினால், நீலகிரி மாவட்டத்தில் உள்ள 22,000 சிறு தேயிலை விவசாயிகள் பாதிப்பிற்கு உள்ளாகி இருப்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டவுடன், இது குறித்து அரசு அதிகாரிகளுடன் நான் விரிவாக கலந்தாலோசித்தேன்.

உலகளாவிய தேயிலை விலை வீழ்ச்சியின் காரணமாக, நீலகிரி தேயிலைத்தூளின் விலையிலும் தாக்கம் ஏற்பட்டு அதனால் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கும் சுமார் 22,000 சிறு தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வண்ணம், 'பசுந்தேயிலை விலை உறுதிப்பாட்டு நிதி', அதாவது Price Stabilization Fund for

Green Tea Leaf ஒன்றினை நிரந்தரமாக ஏற்படுத்திட நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பசுந்தேயிலை விலை உறுதிப்பாட்டு நிதிக்கு, நடப்பாண்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் 8 கோடி ரூபாய், இன்ட்கோசர்வ் சார்பில் 4 கோடி ரூபாய் நிதி என மொத்தம் 12 கோடி ரூபாய் வழங்கப்படும். இது தவிர, ஒவ்வொரு ஆண்டும், "ஊட்டி டீ" திட்டத்தின் மூலம் ஈட்டும் லாபத் தொகையில் 75 சதவீதத்தை இன்ட்கோசர்வ் நிறுவனம் பசுந்தேயிலை விலை உறுதிப்பாட்டு நிதிக்கு வழங்கும். மீதமுள்ள நிதியினை தமிழ்நாடு அரசு வழங்கும்.

இந்த நிதியிலிருந்து தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் ஒவ்வொரு மாதமும் பசுந்தேயிலைக்கு நிர்ணயிக்கப்படும் விலை, தேயிலை வாரியம் நிர்ணயிக்கும் குறைந்தபட்ச விலையை விடக் குறையும் பட்சத்தில், சிறு தேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலை கிலோ ஒன்றிற்கு இரண்டு ரூபாய்க்கு மிகாமல் கூடுதல் ஆதார விலை வழங்கப்படும்.

இதன் மூலம், சுமார் 22,000 சிறு தேயிலை விவசாய உறுப்பினர்கள் தொடர்ந்து நிரந்தரமாக பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**